செய்தி வெளியீடு எண்: 347/2017 நாள்: 15.06.2017

**மாற்றுத்தினாளிகளுக்கான ஒரே மாதிரியான அடையாள அட்டை (UDID – Unique Disability ID Card) பெற இணையத்தின் வழியே பதிவு செய்யும் பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் அரங்கில் வேலூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் வொர்த் தனியார் தொண்டு நிறுவனம் இணைந்து மாற்றுத்திறனாளிகள் ஒரே மாதிரியான அடையாள அட்டை (UDID - Unique Disability ID Card) பெற இணையத்தின் வழியே பதிவு செய்யும் பயிற்சி வகுப்பினை நடத்தியது. இந்த பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

பின்னர் இதில் கலந்து கொண்ட மகளிர் திட்ட வட்டார கள பணியாளர்கள், இ-சேவை மைய கணினி பணியாளர்கள், புதுவாழ்வு திட்டத்தின் களப்பணியாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களிடையே மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களால் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் மத்திய அரசால் வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒரே மாதிரியான அடையாள அட்டை (UDID - Unique Disability ID Card) பதிவு செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் (UDID - Unique Disability ID Card) ஒரே மாதிரியான அடையாள அட்டை பெற இதற்கென உள்ள படிவத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை அசல் மற்றும் நகல், தபால் வில்லை அளவு புகைப்படம் ஒன்று, ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல், இரத்த பிரிவு, சாதி சான்றிதழ் மற்றும் மாற்றுத்திறனாளியின் கையொப்பம் (அ) இடது கை பெருவிரல் ரேகை ஆகியவற்றை படிவத்துடன் இணைத்து இணைய சேவை மையத்தில் பதிவு செய்திட வேண்டும்

இத்திட்டம் சம்மந்தமாக ஏற்கனவே 26.04.2017 அன்று மத்திய அரசின் பயிற்சி பெற்ற அலுவலர்களால் ஒரு நாள் பயிற்சி சென்னையில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தின் மூலம் நடத்தப்பட்டது. இதனை தொடர்ந்து இதுநாள் வரை மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மற்றும் தனியார் தொண்டு நிறுவனம் மூலம் 2787 மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

…2

பதிவு மிகவும் குறைவாக உள்ள காரணத்தால், தற்போது மாவட்டத்திலுள்ள பிற துறைகளுடன் இணைந்து (புதுவாழ்வு திட்டம், அனைவருக்கும் கல்வி இயக்கம், மகளிர் திட்டங்களில் உள்ள இ-சேவை மையங்களிலும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக கட்டுப்பாட்டிலுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்) தங்கள் பகுதியிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு www.swavlambancard.gov.in என்ற வலைதள முகவரியில் பதிவு செய்திட ஏதுவாக இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, இப்பயிற்சியில் கலந்து கொள்ள வருகை புரிந்திருக்கும் அனைத்து அலுவலர்கள் மற்றம் தொண்டு நிறுவன பணியாளர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் பகுதியிலுள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளையும் (UDID - Unique Disability ID Card) 100 சதவீதம் பதிவு செய்திட இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்த பயிற்சி வகுப்பில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.செந்தில்குமாரி, மகளிர் திட்ட உதவி அலுவலர் திருமதி.விஜயகுமாரி, வொர்த் ட்ரஸ்ட் நிறுவன தலைவர் திருமதி.கீதா கணபதி மற்றும் பயிற்சி பெறும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.